# பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்... முதல் பக்க தொடர்ச்சி

அரங்கத்துக்கு வந்தார். அவர் பயணம் செய்த பாதையான தலைமை செயலகம், ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனை, சென்ட்ரல் ரயில் நிலையம், பெரியமேடு ஆகிய 5 இடங்களில் மேடை அமைக்கப்பட்டு மேளம், நடனத்துடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. காரில் பிரதமர் வரும் சாலை முழுவதும் அதிமுக, பாஜ தொண்டர்கள் திரண்டு உற்சாகமாக வரவேற்பு அளித்தனர். சாலையோரங்களில் நின்றிருந்த கட்சியினர், பொதுமக்களை பார்த்து கை அசைத்தபடி பிரதமர் மோடி சென்றார்.

11.30 மணிக்கு விழா மேடைக்கு வந்த பிரதமர் மோடி விழா மேடையில் வைக்கப்பட்டிருந்த எம்ஜிஆர், ஜெயலலிதாவின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து அவருக்கு முதல்வர் எடப்பாடி பொன்னாடை போர்த்தி, கிருஷ்ணர் சிலையை நினைவு பரிசாக அளித்தார்.

முன்னதாக உள்விளையாட்டரங்கில் ஆவடி பீரங்கி தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட அர்ஜுன் எம்பிடி எம்கே 1ஏ ரக ராணுவ கவச வாகன அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். அர்ஜுன் டாங்கை நாட்டுக்கு அர்ப்பணித்த பிரதமர், ராணுவ வீரர்களிடம் உரையாடியதோடு கவச வாகனம் முன்பு வீரர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

பின்னர் விழா மேடையில் இருந்தபடி ரூ.3770 கோடியில் சென்னை, வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் இடையே மெட்ரோ ரயில் சேவை திட்டத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மோடி கொடி அசைத்து தொடங்கி வைத்தார். மேலும், ரூ.293.4 கோடியில் சென்னை கடற்கரை அத்திப்பட்டு 4 வது வழித்தடம் மற்றும் விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர் ஒரு வழிப்பாதை மின்மயமாக்குதல் திட்டத்தையும் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். ஆவடி பீரங்கி தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட எம்.பி.டி. அர்ஜுன் எம்.கே.1ஏ, பீரங்கி கவச வாகனத்தை ராணுவத்திடம் பிரதமர் மோடி ஒப்படைத்தார்.

மேலும், ரூ.2,640 கோடியில் கல்லணை கால்வாய் புதுப்பித்தல் மற்றும் நவீனப்படுத்தும் திட்டம், ரூ.1000 கோடியில் சென்னை இந்திய தொழில்நுட்ப கழக டிஸ்கவரி வளாகம் ஆகியவற்றிற்கும் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து பிரதமர் மோடி சிறப்புரையாற்றினார். தன்னுடைய பேச்சை முடித்துக்கொண்ட பிறகு மேடையிலிருந்த முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் ஆகியோரது கரங்களை ஒன்றாகப் பிடித்து உயர்த்தினார்.

முன்னதாக விழாவில் துணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் வரவேற்புரை வழங்கினார். முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையேற்று உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர், தலைமை செயலாளர், அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து ஐஎன்எஸ் அடையாறு விமானப்படை தளம் சென்ற மோடியை, பங்காரு அடிகளார், அப்பல்லோ குழுமத் தலைவர் பிரதாப் சி ரெட்டி மற்றும் ப்ரீதா ரெட்டி ஆகியோர் சந்தித்து பேசினர். இதையடுத்து சென்னை விமான நிலையம் சென்ற அவர், தனி விமானத்தில் கேரள மாநிலம் கொச்சி புறப்பட்டு சென்றார்.

பிரதமர் மோடி வருகையையொட்டி சென்னை பழைய விமான நிலையத்தில் இருந்து நேரு விளையாட்டு அரங்கம் முதல் 4 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக சுமார் 10 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

## முதல் வரிசையில் கூட்டணி கட்சிகள்

மெட்ரோ சேவை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இந்த விழாவில் கூட்டணி கட்சிகளான பாமக, தமாகா, தேமுதிக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர். இவர்களுக்கு முதல் வரிசையில் இருக்கைகள் போடப்பட்டிருந்தது.

## இசைக்கப்படாத தேசிய கீதம்

பிரதமர் கலந்து கொண்ட நிகழ்ச்சியின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. ஆனால் இறுதியில் தேசியக் கீதம் இசைக்கப்படவில்லை. இதனால் தேசிய கீதம் இசைக்காமல் நிகழ்ச்சி முடிவுற்றது.